(1) காலிங்கராயன் பாடல் — அ.பொ.இந்திரா

பார்புகழும் கொங்கு நாட்டினிலே - திரு
பண்பான ஆந்துறை வெள்ளோடு
கனகபுர மதில் சாத்தந்தை குலத்தில்
கதிரவன் போலவே தான் பிறந்த
சேர்புகழ் லிங்கைய கவுண்டன் மகனாக
சிறப்புடன் லிங்கையன் தோன்றினனே
அன்னவன் நற்பணியான் பாட - எங்கள்
அண்ணன் கணபதி முன் இருப்பார் -
எண்ணூறு ஆண்டுக்கு முன் பிறந்த - நல்ல
இளவல் காலிங்கன் நற்செயலால்
மண்ணுபுகழ் பெற்ற மகிமையினை - நம்ம
மக்களிடம் சொல்ல வேண்டுமம்மா
காவிரியாற்றில் கரிகாலன் — அங்கு
கல்லணை கட்டினான் கொள்ளிடத்தில்
சோழவளநாடு தஞ்சை திருஆரூர்
சோறுண்டு வாழ்ந்தது நாகபட்டணம்
கரிகாலன் அன்னையும் பெரியகுலக்கவுண்டச்சி
இரும்பிடர்த்தலையாரின் தங்கையம்மா
கல்லணை கட்டிட கொங்குப் பெருமக்கள்
கடியபணிகள் புரிந்திருப்பர் -
உழைப்பில் உயர்ந்தது கொங்கினம் - அன்று
ஊக்கத்துடன் பணிசெய்திருப்பர்
களைப்பை அறியாது கண்ணும் கருத்துமாய்
கல்லணை கட்டத் துணையிருந்து
பணிகள் புரிந்திட்ட கொங்கின மக்களை
பாரதம் என்றும் மறக்காது -

அ.பொ.கிருத்தகாமி

அத்திப்பாளையம் அஞ்சல்
639111
கிருமணவட்டம்
அரையகோடு
11.12.1982

பூந்துறை வெள்ளோடு — பூமலர்ந்த கனகபுரம்
சாந்து சவ்வாது மணம் — சார்ந்திருக்கும் சர்வேஸ்வரன்
பூமாதேவி மண்ணு — அது
புகழடைந்தது கண்ணு

பிறப்பார் பலபேர்கள் — இறப்பார் சிலபேர்கள்
பெரும்பணி புரிந்தவர்கள் — வரலாற்றில் இடம்பெறுவர்
பூந்துறை நாட்டு மண்ணு - நம்ம, கொங்கு
இனம் வளர்ந்தது கண்ணு

சாத்தந்தை குலத்தினிலே — சரித்திரத்து நாயகனும்
நஞ்சையகவுண்டர் மகன் — நலம்புரிந்த காளிங்கனும்
பிறந்த பூந்துறை மண்ணு — எங்கும்
பெருமைப்பட்டது கண்ணு

பள்ளிப்படிப்பினிலே — படுசுட்டி காளிங்கனும்
துள்ளி எழுந்து தமிழ் — துரிதமாகக் கற்றவனும்
கனகபுரத்து மண்ணு — அது
காளிங்கராயன் கண்ணு

இருபதாம் வயதினிலே — இளவலுக்கு மணமுடிக்க
பெரியவர்கள் ஒன்றுகூடி — பேசுகிறார் சாவடியில்
லிங்கையனுக்கு பொண்ணு - நாம
தேடவேணுமென்னு

என்று மந்தயங்காளி — எழுந்து நின்று குரல்கொடுக்க
பங்காளி மகள் வியம்மா — பருவதமும் எழுந்து நின்று
மாமன் வீட்டுப் பொண்ணு - நாம
கேட்போமடா கண்ணு

அத்துப்பட்டு ஊர்களுக்கு — துரிதமாக செய்தி சொல்லி
பங்கும் பங்காளிகட்கு — பாசமுடன் அழைப்புவிட்டார்
நஞ்சையகவுண்டர் தாங்க -
நல்மகனின் தந்தை வாங்க

வில்லுவண்டி சலங்கைவண்டி - மெத்தைவைச்ச குதிரைவண்டி
அழகான சாரட்டுவண்டி — அசைந்துவரும் டயருவண்டி
ரேக்ளா வண்டி பூட்டி — அங்கு
துளிர் பறக்குது சாட்டை

(3)

காங்கேயம் காளைகட்கு — கனத்துளிர் கொம்பெடுத்து (சீவி)
ஆலாம்பாடி எருதுகளின் — அழகுக் கொம்பில் சலங்கை கட்டி
கழுத்தில் சலங்கை மாலை — அங்கே
கலகலக்குது சாலை

அக்கக்கா பொண்ணுத்தக்கா — அருக்காணி வெலாத்தக்கா
சின்னாத்தா சிராத்தக்கா — சீக்கிரம் தலைசீவி வாங்க
அம்மணியெல்லாம் வாங்க —
வெகு துருசாகத்தான் நீங்க

கனகபுரத்தைவிட்டு — காளைமாட்டு வண்டியெல்லாம்
ஒன்றன் பின் ஒன்றாகவே — ஒரு காதம் ஒய்யாரமாய்
துருசு நடை போட்டு — வெகு
தூரமதைக் கடந்து

ஆந்துறை எழுமாத்தூர் — யோற்றும் தலையநல்லூர் (சிவகிரி)
தாமரைக்கரையூரும் (கொடுமுடி) தாண்டுதுபார் வண்டிகளும்
பொண்ணு வீட்டைத் தேடி
ஆவுடையார் பாறை நாடி

பண்ணை குலத்துத் தாய்மாமன் — பெரும்
பண்ணையம் வைத்துள்ள கோமான் — அவர்
பட்டாசாலையுள்ள — தொட்டிக்கட்டு வீட்டில்
பாசமாய் — உறவின் நேசமாய்

நங்கை கொழுந்திகள் அமர்ந்து — பல
நல்ல உரைகளைப் பகர்ந்து — அட
மச்சான் கொழுந்தனார் — அமருங்கள் என்றுமே
கூடினார் — உரையாடினார்

ஆந்துறை மச்சாண்டார் வாங்க — நம்ம
புதுப்பெண்ணைப் பார்க்கவும் தாங்க — அய்யா
சந்தனம் மணக்க — வந்தினம் குவிக்க
அமர்ந்தார் — நெஞ்சு நிமிர்ந்தார்

சமையல் நடக்கின்ற இடத்தில் — பலர்
சலசலப்பு பேசக்கும் மடத்தில் — நம்ம
லிங்கையன் மாமனை — சமைக்கின்ற பண்டாரம்

லிங்கையன்மாமனே — சமைக்கின்றபண்டாரம்
கேட்டானே; —— ஒருகேள்வியை

அ.ப. [illegible]

30. 8. 2001

காலை 4 மணி

(4) ௫

நாய்கள் பழக்கிய கவுண்டரா? இல்லை
மாடு பழக்கிய கவுண்டரா? என்று
பண்டாரன் கேள்விக்கு — மாடு பழக்கியென
மாமனும் — பதில் — சொல்லவே

எருமை உழவுகள் ஓட்டுவோர் - நல்ல இனிய அரிசியை உண்பவர்
பசு, மாடுகவலைகள் பூட்டியோர் - மணக்கின்ற கம்மஞ்சோறு தின்பவர்
ஆகவே - இவர்கட்கு - குறுவை அரிசியை
போட்டிடு - சமையல் நாட்டிடு

மாமாவும் சொன்னதை உணர்ந்து - அங்கு
மனம் நொந்த லிங்கையன் சினந்து
அண்ணனும் தங்கையே — பங்கும் பங்காளியே
வாருங்கள் — வண்டி — ஏறுங்கள்

பூந்துறை போனதும் கூடனும் - நாம்
புதிய சபதத்தை ஏற்கனும்
வரவாறு கூறவே — பவானியில் அணை
கட்டுவோம் — புகழ் - நாட்டுவோம்

பவானியில் அணைகட்ட — தெய்வப்
பாம்பு முன்னே வழிகாட்ட
ஊராட்சிக் கோட்டையை (மலை) ஒட்டிய பாதையை
வாங்கினார் — விலக்கு, தாங்கினார்
குடம் நூறு பவுனுக்கு — மலை நூறு பவுனுக்கு
வாங்கினார் — விலக்கு தாங்கினார்

---

பொன்னுக் கேட்கப் போனபக்கம்
பொருத்தமில்லா மாமன் சொல்லால்
வாய்க்கால் வெட்டி வைச்சான் — கன்னியா, ஊரோடு
வளம் பெறவே வைச்சான் பாரு - பொன்னையா,
காலிங்கராயன் பூமி — இந்த பூமியை ஆளும் சாமி
கொங்கு நாட்டு மண்ணு, நம்ம
கொங்கன் வளரும் கண்ணு

பவானி ஆற்றினிலே - படுகெட்டியாய் அணையைக் கட்டி
பாம்பு அது முன் நடக்க, காலிங்கனும் வாய்க்கால் வெட்ட
ஆசாரிகள் துணையோடு, அமைத்துவிட்டார் நீர்த்தடுப்பு (சட்டர்)
கரைகள் அமைத்துவிட்டார் கன்னியா,

காலிங்கனின் பணி புரிந்தார் பொன்னையா,
கொங்கு நாட்டு பூமி - நம்ம கொங்கிளம் வளர சாமி
பூந்துறை நாட்டு மண்ணு, இங்கு, புகழடைந்தது கண்ணு

(5)

ஏ. ரோடுபாதூரு          ஊஞ்சலூர் வெங்கம்பூரு

கொடுமுடிக்கரை தாண்டி – ஆவுடையார்பாறைவரை
பன்னிரெண்டு ஆண்டுகாலம் கண்ணையா, அவர்
பட்டபாடு எப்படியிருக்கும் பொன்னையா,
அரையநாட்டு மண்ணு, மக்கள் அனைவர்வாழணும்கண்ணு
காலிங்கராயன் பூமி - இந்த பூமியை ஆளணும்சாமி

---

மஞ்சள் விளையுதடா — மாகரும்பு வளருதடா
கொஞ்சும்பயிர் நெல் வளர – செஞ்சுவச்சான்காலிங்கனும் – இதை
நெஞ்சிசுநாமபார்க்கனுமே கண்ணையா -
நெஞ்சு நிறைய வாழ்த்தனுமே பொன்னையா
காலிங்க ராயன் பூமி – இதைக்
காலம் சொல்லுது சாமி -

---

வாழ்வாங்கு வாழ்ந்த இனம் – வாழ்வளிக்கும் உழவரினம்
நலம்புரிந்த காலிங்கனைக் கண்ணையா, நம்ம
நாட்டினைக்கும் எடுத்துரைப்போம் சொல்லையா
காலிங்க ராயன் பூமி - இதைக்
காலம் சொல்லணும்சாமி
பூந்துறைநாட்டு மண்ணு - இது
புகழ்பெருகணும் கண்ணு

---

954324-254323

அ. பொ. கந்தசாமி
அத்திப்பாளையம், அஞ்சல்
639111
கரூர் மாவட்டம்